பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 23 சனிக்கிழமை 05.02.2022 கதிர் 92

**இது ரகசியம் அல்ல!**

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி முறையான விசாரணை அவசியம் என்று தமிழர் தரப்பு கோரி வருகையில் அதற்கு சர்வதேச ஆதரவும் கிட்டி வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் ☞ 2

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் சுடர் ஏற்றி ஐ.நாவிடம் நீதி கோரி உறவுகள் பெரும் போராட்டம்



(சு.தவசீலன்)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர நாளான நேற்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து காணாமல் ஆக்கப்பட்டவருக்கான நீதியை சர்வதேசத்திடம் வலியுறுத்தி முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இன அழிப்பின் நினைவுச் சின்னமாகக் காணப்படும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் ☞ 9

## இலட்சக்கணக்கானவர்களை இன அழிப்புச் செய்துவிட்டு

# தமிழர் தாயகத்தின் இருப்பையும் சிதைத்து வருகிறது கோட்டா அரசு

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் குற்றச்சாட்டு



(சு.தவசீலன்)

இலட்சக்கணக்கானவர்களை இன அழிப்புச் செய்த கோட்டாபய அரசு, அதற்கான நீதியை மறுதலிக்கும் அதேநேரம், தமிழர் தாயகத்தின் இருப்பையும் கேள்விக்குள்ளாக்கி சிதைத்து வருகின்றது என முள்ளிவாய்க்காலில் நேற்று முன்னெடுத்த சுதந்திர தின எதிர்ப்புப் பேரணியின் இறுதியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 9

# பொறுப்பை மறந்துவிட்டு உரிமை பற்றி மட்டும் பேசுவது உகந்ததல்ல

**சுதந்திர தின உரையில் கோட்டா தெரிவிப்பு**



பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் உயர்ந்தபட்ச பலனை அடைவதற்கு, அனைவரும் நாட்டுக்கான தமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான நாட்டின் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. அதுபோன்றே, பொறுப்புகளும் உள்ளன என்றும் எடுத்துரைத்த ☞ 9

# கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 வீதத்தால் உயர்வு



கடந்த வாரத்தை விட இந்த வாரம் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளானவர்களின் எண்ணிக்கை 30 சதவீதம் அதிகரித்துள்ளது என்று வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ☞ 2

# பல்கலையின் முன் கட்டப்பட்ட பதாகையால் பொலிஸார் – மாணவர்களிடையே முறுகல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள பகுதியில் இலங்கையின் சுதந்திர தினம் கரிநாள் குறிப்பிடப்பட்ட பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பல்கலைகழகத்தின் முன்பாக நேற்று மாலை 5 மணி முதல் சிவில் உடை தரித்த புலனாய்வாளர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், ☞ 2

# 500 தாதிகளுக்குக் கொரோனா!

அரச வைத்தியசாலகள் மற்றும் வைத்தியநிலையங்களில் கடமையாற்றும் சுமார் 500 தாதிகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் இரண்டு வயதுக்கு கீழ் குழந்தைகளுள்ள தாய்மாரும் அடங்குவர் என்று அகில இலங்கை தாதியர் சங்கத்தின் செயலாளர் எஸ். பி மெதவத்த தெரிவித்துள்ளார்.

தேசிய வைத்தியசாலையில் 200 தாதியர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அதில் 21 கர்ப்பிணிகளும் அடங்குவர். டிசொய்சா மகளிர் வைத்தியசாலையில் ஐந்து கர்ப்பிணித் தாய்மாரும், கண்டி அரச வைத்தியசாலையில் நான்கு தாதிகள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீண்டும் கொரோனா ☞ 9

# ரஞ்சன் விடுதலை இல்லை

இலங்கையின் 74ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் நேற்று 197 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு ☞ 2

**சந்தேகநபரின் உடல்நிலை குறித்து விசாரிக்க**

# குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நேற்று சென்றார் பேராயர்



பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள தேவாலய ஊழியரைச் சந்திப்பதற்காகப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ☞ 2

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தான் 'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற மாதிரி, நீதி அமைச்சரும் ராஜபக்ஷக்கள் சகோதரர்களில் முக்கியமானவருமான பஸில் ராஜபக்ஷ தெரியாமல் சில விடயங்களை உளறிக் கொட்டிச் சிக்கலில் மாட்டி யிருக்கின்றார்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் கட்டளைப் பீடச் சங்கிலியின்படி (Chain of Command) ராஜபக்ஷக்கள் சகோதரர்களில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவும்தான் சிக்கல் களை எதிர்கொள்வார்கள், பஸில் ராஜபக்ஷ அல்ல என்றுதான் பலரும் கருதி வந்தனர்.

ஆனால், சும்மா இருக்காமல் வாயைக் கொடுத்துத் தம்மைக் கொண்டு போய்சிக்கலில்மாட்டிவைத்திருக்கின்றார் பஸில் ராஜபக்ஷ.

பஸில் ராஜபக்ஷ இரட்டைப் பிரஜாவுரிமைக்காரர். அமெரிக்கக் குடியுரிமையையும் கொண்டிருப்பவர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களை வடகொரியாவில் இருந்து கறுப்புச் சந்தைப் பணம் மூலம் கொள்வனவு செய்தோம் என்று பஸில் ராஜபக்ஷ கூறினார் என உள்ளூர் சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி முதலில் வந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வடகொரியா மீது அமெரிக்காவும் நேச நாடுகளும் பொருளாதாரத் தடை விதித்திருக்கின்றன. அந்தத் தடையை மீறி இலங்கை களவாக அந்த நாட்டுடன் ஆயுத வர்த்தகம் செய்திருக்கின்றது. அதன் மூலம் அந்த நாடு கறுப்புச் சந்தையில் பணமீட்டித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்கின்றது. உண்மையில் இந்த நடவடிக்கை அமெரிக்காவுக்கு எதிரான குற்றம். அதிலும் அமெரிக்கப் பிரஜையான பஸிலே சம்பந்தப்படுகின்றார்.

என்ன ஆயுதங்கள் வாங்கப்பட்டன, எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன, அதற்கான பண ஈட்டத்தை இலங்கைத் தரப்பு எப்படி பெற்றுக் கொண்டது, அதை எப்படி இலங்கையின் நிதிக் கணக்கில் அப்போதைய அரசு சரி செய்தது என்பவை எல்லாம் விடை காணப்பட வேண்டிய கேள்விகள்.

ஆயுத சுவீகரிப்புக்காகத் தமிழ்ப் புலிகள் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தும் கொழும்பு, தான் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு கறுப்புப் பணம் பெற என்ன செய்தது என்பதை மறைக்கின்றது.

வட கொரியா போன்ற நாடுகள்தான் மனித குலத்திற்கு எதிரான நச்சு ஆயுதங்களைத் தயாரிக்கும் வலிமை கொண்டுள்ளன. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் புலிகள் மீது அரசுப் படைகள் நச்சு ஆயுதங்களைப் பயன்படுத்தியமைக்கு வலுவான ஆதாரங்கள் உண்டு என தமிழர் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது. சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் அதனை நிரூபிக்க முடியும் என்பது தமிழர் தரப்பு வாதம். ஆனால் அத்தகைய நியாயமான விசாரணையை முன்னெடுக்க இலங்கை தரப்பு மறுக்கின்றது. அதுவும் கூட கள்ளச் சந்தையில், தடை செய்யப்பட்ட வட கொரியாவிடமிருந்து ஆயுதங்கள் வாங்கியமை போன்று மறைக்கப்படும் – மறுக்கப்படும் – விவகாரமாக இருக்கிறது.

இப்படி நச்சு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை பற்றி விடயங்கள், தகவல்களை வெற்றிகரமாக சேகரித்தமையால் தான் பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தி, காணாமலாக்கப்பட்டார் என்று கருதப்படுகின்றது.

வாய் தடுமாறி, தம்பட்டம் அடித்து, இந்த விடயத்தை பஸில் ராஜபக்ஷ அவிழ்த்துக் கொட்டியமை பெரும் பூதாகரப் பிரச்சினையாகலாம் என்பதைப் புரிந்து கொண்ட சட்டப் பேராசிரியர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுதாகரித்துக் கொண்டு முந்தினார்.

வழமை போல தகவல் வெளியானமையின் 'விளைவை' சம்பந்தப்பட்ட பத்திரிகை மீது சுமத்தினார் அவர். பஸில் ராஜபக்ஷ அப்படிக் கூறவேயில்லை, அந்தச் சிங்களப் பத்திரிகைதான் விட்டத்தைப் பார்த்துக் கொண்டு தன்பாட்டில் அப்படி எழுதி விட்டது எனக் கதை விட்டார் அவர்.

பஸில் ராஜபக்ஷ வெளியிட்ட தகவலை அமெரிக்கா விசாரித்து உறுதிப்படுத்தினால் இலங்கைக்கு எதிராக அமெரிக்கத் தடை வருவது தவிர்க்க முடியாத கட்டாயமாகிவிடும்.

கடந்த புதனன்று ஒரு செய்தியாளர் சந்திப்பில் பஸிலிடம் செய்தியாளர் ஒருவர் மீண்டும் நேரடியாக இது பற்றிக் கேட்டார்.

"யுத்தத்தின் போது இடம்பெற்ற பல சம்பவங்கள் வெளிப்படுத்தப்படவே முடியாதவை" – என்று கூறிய பஸில், "இந்தக் கேள்வியை மீள மீளக் கேட்டு நீங்கள் மேலும் பிரச்சினைகளைக் கூட்டப் போகின்றீர்களா?" – என்று சீறிப் பாய்ந்திருக்கின்றார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்ற பல சம்பவங்கள் சர்வதேச நியம முறைகளுக்கு அமைய நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற தேவைப்பாட்டை – கட்டாயத்தை – பஸிலின் இந்தக் கேள்வியும் பதிலும் தந்து நிற்கின்றன.

பஸிலின் இப்போதைய பதிலிருந்து மேலும் இரண்டு விடயங்கள் தெளிவாகியுள்ளன.

ஒன்று – யுத்தத்தின் போது நடந்த பல சம்பவங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. வெளிப்படுத்தப்படவில்லை. அவற்றை வெளிப்படுத்த இலங்கை ஆட்சிப் பீடம் விரும்பாது. அனுமதிக்காது.

இரண்டாவது – இப்படி விடயங்களை மூடி மறைக்கும் சிந்தனையில் கொழும்பு இருப்பதால், இந்த விவகாரங்களை ஒட்டிய விசாரணைகள் இலங்கை நீதிமன்றங்களினால் நீதி, நியாயமான முறையில் நடத்தப்படமாட்டா என்பது தான்.

கள்ளச் சந்தைப் பணம் மூலம் – இரகசியமாக – வட கொரியாவிடமிருந்து தருவித்த நச்சு ஆயுதங்கள் மூலமே புலிகளை அரசுப் படைகள் தோற்கடித்தன என்ற குற்றச்சாட்டு முழுமையாகவும், ஐயந்திரிபறவும் விசாரிக்கப்பட வேண்டும்.

அதற்கான முயற்சியை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்பது தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு.

அமெரிக்காவையே ஏமாற்றிய ராஜபக்ஷக்கள் விடயத்தில் வொஷிங்டன் வெறுமனே பார்வையாளராக பார்த்திருக்கப் போகின்றதா? அல்லது காத்திரமாக நடவடிக்கை எடுக்கப் போகின்றதா? பார்த்திருப்போம்.

– மின்னல் –

## குற்றத் தடுப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு விஜயம் செய்தார்.

சந்தேகநபரின் உடல்நிலை குறித்து விசாரிப்பதற்காக பேராயர் நேற்று இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வருகை தந்த அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதை தவிர்த்து சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டிருந்தார்.

## பல்கலையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிறிது நேரம் கழித்து 7.30 மணியளவில் கோப்பாய் பொலிஸார் ஓட்டோவில் குறித்த பதாகை கட்டப்பட்ட இடத்துக்கு வருகை தந்தனர். அவர்கள் பதாகையை கழற்றி ஓட்டோவில் வைக்க முற்பட்ட நிலையில் மாணவர்களால் எதற்காக பதாகையைக் கழற்றுகின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இந்தநிலையில், பொலிஸ் தலைமையகத்தில் இருந்து தங்களுக்கு இதனை அகற்றுமாறு பணிப்பு விடுக்கப்பட்டது எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மாணவர்கள் பொலிஸாருடன் வாக்குவாதப்பட்ட நிலையில் உங்களுக்கு பதாகை வேண்டுமெனில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தாருங்கள் எனத் தெரிவித்து விட்டு மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்க குறித்த இடத்திலிருந்து விரைவாகக் கோப்பாய் பொலிஸார் வெளியேறினர்.

## கொரோனாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது கொரோனா இறப்பு எண்ணிக்கையில் 10 சதவீதம் அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் பதிவான இறப்புகளில் மூன்றில் இரண்டு பங்கு வீதமானோர் முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரஞ்சன் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விடுவிக்கப்பட்ட கைதிகளின் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உள்வாங்கப்படவில்லை.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 500 தாதிகளுக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பரவ ஆரம்பித்துள்ளதால் கொரோனாத் தொற்றுக்குள்ளான தாதியருக்கும் பாலூட்டும் தாதியருக்கும் விசேட விடுமுறை வழங்கும்படி தாதியர் சங்கம் சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளது.






# டக்ளஸ் மீனவர்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்!

## செயற்றிறனற்ற அமைச்சர் பதவியும் விலக வேண்டும்!





### சாணக்கியன் வலியுறுத்து

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமானத் தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றைக் கோரி ஆரம்பிக்கப்பட்டப் போராட்டம் 4 ஆவது நாளாக கடந்த வியாழக்கிழமை முழு வீச்சுடன் இடம்பெற்றது.

இந்தநிலையில் அன்றையதினம் பருத்தித்துறை – சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும், இரா. சாணக்கியனும் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதன்போது மீனவர்கள் மத்தியில் கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். மேலும் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு :-

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டிருந்தார்.

மீனவர்கள் மதுபோதையில் இருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துத் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்கள் மத்தியில் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.

அத்துடன், மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக பதவி விலக வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு!

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இராணுவ அதிகாரிகள் பலருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, 480 அதிகாரிகளும், 8 ஆயிரத்து 34 இராணுவ வீரர்களும் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையின் பேரில் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் 480 அதிகாரிகள் மற்றும் 8 ஆயிரத்து 34 மற்ற ஏனைய தரநிலைகளைக் கொண்டவர்களுக்கு இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, 7 சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரலாகவும், 16 கேர்ணல்கள் பிரிகேடியர் தரமாகவும், 36 லெப்டினன்ட் கேணல்கள் கேணல் தரமாகவும், 50 மேஜர்கள், லெப்டினன்ட் கேணல் தரமாகவும், 207 கப்டன்கள் மேஜர் மற்றும் லீ ஆகவும் பதவி உயர்வு பெற்றனர். 480 இராணுவத்தினர் லெப்டினன்ட் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

ஜெனரல் சவேந்திர சில்வா 2019 ஆண்டு ஓகஸ்ட் 18 ஆம் திகதி இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் குறுகிய காலத்திற்குள் பெருமளவிலான அதிகாரிகள் மற்றும் ஏனைய இராணுவ வீரர்களுக்குப் பதவி உயர்வை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரதின வைபவத்தில் மயங்கியவர்களால் பரபரப்பு!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொண்டிருந்த பலர் மயக்கமடைந்தமையால் பரபரப்பு ஏற்பட்டது.

நாட்டின் 74 ஆவது சுதந்திரதின நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று காலை கோலாகலமாக ஏற்ப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த மாணவர்கள் மற்றும் ஊர்காவற்படை வீரர்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்டோர் திடீர் என மயக்கமடைந்து விழுந்தனர். இதனால் குறித்த நிகழ்வில் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.




அதிக நேரம் வெயிலில் நின்றமையால் அவர்கள் மயக்கமடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக அவர்களுக்கு முதலுதவி சிகிச்சைகள் வழங்க்கப்பட்ட பின்னர் நிகழ்வு தொடர்ந்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

றோயல் அக்கடமி
Royal Academy
நாவலர் றோட், நல்லூர்
தரம் 6
அரசடி றோட், யாழ்ப்பாணம்.
Tamil & English Medium
ஆரம்பம்:- 05.02.2022
சனிக்கிழமை (மாலை 2 மணி)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உரிமையை மறுத்தால் பொறுப்பு வருமா?

இலங்கை நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று நடந்து முடிந்து விட்டன. அடுத்த வருடம் வருவது இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம்.

சுதந்திரமடைந்து முக்கால் நூற்றாண்டைக் கடந்து விட்ட போதும் தேசம் என்று பெருமை கொள்ளும் நிலையில் இலங்கை இல்லை என்பதுதான் உண்மை நிலைமை.

இலங்கையின் சுதந்திரதின நிகழ்வை எதிர்க்கட்சித் தலைவரும் அவரின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தோரும் அடியோடு புறக்கணித்து விட்டனர். நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து கிடக்கையில் சுதந்திர தினம் என்ற தமாஷாக்கள் தேவைதானா என்று எதிர்க்கட்சியினர் கேட்பது நியாயமானதே.

எரிபொருள் பற்றாக்குறை கழுத்தை நெரிக்கின்றது. தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு நாட்டிடம் அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை. அதனால் மின்வெட்டை எதிர்கொள்ளும் நிலைமையில் நாடு. அதற்கிடையில் சுதந்திர தின அணிவகுப்பு, அதற்கான ஒத்திகை, வான் கலங்கள் பறப்பு என்றெல்லாம் எரிபொருளைப் பெருமளவின் வீண் விரயமாக்குவதா என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

அதேபோல ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடும் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இந்த சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணித்துள்ளார். அது மட்டுமல்ல, வழமையாக சுதந்திர தினத்தை ஒட்டி தாம் நடத்தும் விசேட வழிபாட்டு நிகழ்ச்சியையும் அவர் இம்முறை மேற்கொள்ள வில்லை.

நீதி, சுதந்திரம் மறுக்கப்பட்ட நாட்டில், சுதந்திரதினம் கொண்டாடுவது எங்ஙனம் என்ற சிந்தனையில் – முடிவில் – அவர் இந்தத் தீர்மானத்துக்கு வந்திருப்பார் என்று நம்புகின்றோம்.

நல்லது. ஆனால் கொழும்புப் போராயர் இன்று வந்திருக்கும் இந்த முடிவுக்கு, இந்தத் தீவின் தனித்துவமான இனங்களில் ஒன்றான தமிழர் தேசம் ஐந்து தசாப்தங்களுக்கு முன்னரே வந்து விட்டது. அதனால்தான் இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் வருடம் தோறும் கரிநாளாக – கறுப்பு தினமாக – அனுஷ்டித்து வருகின்றார்கள்.

நாம் ஏற்கனவே நேற்று இப்பத்தியில் கூறியபடி, இந்தத் தீவின் புராதன குடிமக்களான தமிழர்களைப் பொறுத்தவரை இது சுதந்திர தினம் அல்ல. அவர்களின் இறைமையைக் கைப்பற்றி, அடிமைகளாக்கி, தங்களின் அதிகாரத்தை நிலை நிறுத்திய அந்நிய தரப்புகள் அதிகாரத்தை கைமாற்றிக் கொண்ட தினம் இது. அவ்வளவுதான்.

அதனால்தான் தமிழர் தேசம் நேற்றைய சுதந்திரதினத்தை வழமைபோல கறுப்பு தினமாக – கரிநாளாக – அனுஷ்டித்தது.

நேற்றைய சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ‘பொறுப்புக்களை மறந்து உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது உகந்தல்ல’ என்று தத்துவம் உரைத்திருக்கின்றார்.

உண்மையில், உரிமைகளை மறுத்து விட்டு, பொறுப்புக்களை மட்டும் பேசுவதுதான் அடிமைப்படுத்தல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உரிய உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டால்தான் பொறுப்புகள் உணரப்படும். இதைப் புரியாமல் – சுதந்திர தின நிகழ்வில் அடிமைப்படுத்தல் கோட்பாடு பற்றி தத்துவம் உரைக்கும் ஒருவரை நாட்டின் ஜனாதிபதியாகப் பெற்றமை இந்த நாட்டு மக்கள் பெற்ற துரதிஷ்டமின்றி வேறில்லை.

# ஆயுதம் வாங்க எதற்காக கறுப்புப் பணம் பெறப்பட்டது?

## பஸிலிடம் வஜிர கேள்விக்கணை



போர்க் காலத்தில் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதற்கு சீனா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் முன்வந்திருந்த நிலையில், எதற்காக வடகொரியா தேர்வு செய்யப்பட்டது என்பது தொடர்பாக நிதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு தெளிவுப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான வஜீர அபேவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு இது தொடர்பில் அவர் நான்கு கேள்விகளை முன்வைத்து கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆயுதக் கொள்வனவுக்கு எதற்காக கறுப்புப் பணம் பயன்படுத்தப்பட்டது?

போர் நடவடிக்கைக்கு நிதித் தேவையெனில் நாடாளுமன்றம் ஊடாக பெற்றிருக்கலாம். எனவே, நிதி பெறப்பட்ட வழிமுறைகள் மற்றும் இடங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியம்.

சீனா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஆயுதம் வழங்குவதற்கான ஒத்துழைப்பை வழங்கிவந்த நிலையில், எதற்காக வடகொரியா தேர்வு செய்யப்பட்டது?

வடகொரியாவில் இருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் எவை? அவை உரியவகையில் தரவுக் கட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டனவா?

போரின் போது கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவில் இருந்து ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்டது என நிதி அமைச்சர் கருத்து வெளியிட்டிருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், நிதி அமைச்சரின் இந்த அறிவிப்பு, சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். எனவே, எம்மால் எழுப்படும் 4 கேள்விகளுக்கு நாடாளுமன்றத்தில் அவர் உரிய விளக்கத்தை விரைவில் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துக்கு சிறிதரன் எம்.பி. அவசரமாகக் கடிதம்!

கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரத் துறைக்கே இழுக்கை ஏற்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும் கண்டாவளை வைத்திய அதிகாரிக்கு எதிராக உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பில் தனக்கு அறியத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் சுகாதாரத்துறை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

02.02.2022 ஆம் திகதியிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினரால் எழுதப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –,

கண்டாவளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் வைத்திய அதிகாரி தனது தனிப்பட்ட நலன்களையும், சுய விளம்பரப்படுத்தலையும் நோக்காகக் கொண்டு நான் அவருடன் தொலைபேசியில் உரையாடிய குரல் பதிவை ஊடகங்கள் வாயிலாகப் பகிரங் கப்படுத்தியுள்ளமை எனது சிறப்புரிமையை மீறுவதாகவும், தனிப்பட்ட நற்பெயருக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளது.

மேற்படி வைத்தியரின் சகோதரனும் எனது நண்பருமான வைத்தியர் சயந்தகுமார் என்னுடன் தொலைபேசி மூலம் உரையாடி உளவியல் ரீதியாக தாக்கம் அடைந்துள்ள தனது சகோதரியோடு கலந்துரையாடுமாறு என்னை மிக விநயமாக கேட்டுக்கொண்டமைக்காக 27.01.2022 திகதி மாலை அவருடன் தொடர்பு கொண்டு உரையாடி இருந்தேன்.

நல்லெண்ண நோக்கில் நான் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலை எனது அனுமதி இன்றி பதிவு செய்து அன்றைய தினமே அதனை ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் வாயிலாகப் பகிரங்கப்படுத்தி இருந்தமை எனது கௌரவத்துக்கும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, மேற்படி தொலைபேசி உரையாடலை எனது அனுமதி இன்றிப் பதிவு செய்தமைக்கும், அதனை பொதுவெளியில் பகிரங்கப்படுத்தியமைக்கும் எதிராக உடனடி நடவடிக்கை எடுப்பதோடு, முழுக்க முழுக்க தனது சுய விளம்பரப்படுத்தலை மையமாகக்கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரத் துறைக்கு இழுக்கை ஏற்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளை முன் னெடுக்கும் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பில் எனக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ரயிலிலிருந்து வீழ்ந்து படுகாயம்!

ஒஹிய இதல்கஸ்ஹின்ன ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள சுரங்கத்துக்கு அருகில், தம்பதிகளான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருவர் ரயிலில் இருந்து வீழ்ந்து பலத்த காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இந்த தம்பதியினர், கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தபோது, சுரங்கத்துக்கு அருகில் முதலில் யுவதி தவறி வீழ்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, அவரைக் காப்பாற்ற முயற்சி செய்து, பயணித்துக்கொண்டிருந்த ரயிலில்; இருந்து பாய்ந்த இளைஞரும் காயமடைந்து தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸைச் சேர்ந்த இளம் தம்பதியினரே இவ்வாறு காயமடைந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

ரயிலில் இருந்து வீழ்ந்து காயமடைந்த தம்பதியினர் அதே ரயிலில் ஹப்புத்தளைக்கு கொண்டுவரப்பட்டு, அம்புலன்ஸ் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரயிலின் கதவு பகுதியில் நின்றவாறு, மேற்படி யுவதி செல்ஃபி எடுக்க முயன்றபோது, தவறி விழுந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. இதுதொடர்பில் ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இரா.சம்பந்தன் ஐயாவுக்கு இன்று 89 ஆவது அகவை



- பா.அரியநேத்திரன் -

இன்று 2022 பெப்ரவரி 05 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவிற்கு 89 ஆவது பிறந்தநாள்.

1933 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி பிறந்தார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சம்பந்தனின் தந்தை ஏ.இராஜவரோதயம், கல்லோயா திட்டத்தில் பணியாற்றியவர். சம்பந்தன் பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி, மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். லீலாதேவி என்பவரைத் திருமணம் புரிந்து இவர்களுக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி என மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

பிரித்தானிய முடியில் இலங்கை இருந்தபோது பிறந்தவர் இராஜவரோதயம் சம்பந்தன் ஆவார். டொனமூர் அரசமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகளில் பிறந்தவர். அதாவது இலங்கை 1948 இல் சுதந்திரம் பெறும் போது அவருக்கு 15 வயது முடிவடைய ஒரு நாள் குறைவு.

இலங்கைச் சட்டக் கல்லூரியில் கற்று வழக்கறிஞராகப் பணிபுரிந்த சமயம் 1961, காலப்பகுதியில் தந்தை செல்வாதலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் இடம்பெற்ற அஹிம்சை ரீதியிலான போராட்டங்களில் அவர் பங்குபற்றியமையுடன் பனாக்கொடை இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை பெற்றவர்.

1976 மே 14 இல் தந்தை செல்வா தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியால் வட்டுக்கோட்டையில் எடுத்த தமிழீழ தீர்மானத்தை முழுமையாக ஏற்று 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தனது 44 ஆவது வயதில், முதன்முதலாகத் திருகோணமலையில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு அந்த தேர்தலில் 15 ஆயிரத்து 144 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

1983 செப்ரெம்பரில் நாடாளுமன்ற ஆசனத்தை இழந்த இரா. சம்பந்தன், அதன் பின்னர் 1989 இல் 6 ஆயிரத்து 48 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். மற்றும் 1994 தேர்தல்களில் தோல்வியடைந்திருந்தார்.

அந்த தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்த சட்டத்தரணி அருணாசலம் தங்கத்துரை, 1997 ஜூலை 5 ஆம் திகதி திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி நிகழ்வில் கலந்துகொண்ட போது அங்கு இடம்பெற்ற தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அருணாசலம் தங்கத்துரையின் படுகொலையின் பின், ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பட்டியலில் அடுத்த நிலையில் இருந்து 1997 ஆம் ஆண்டு சம்பந்தன் நாடாளுமன்றுக்கு நியமிக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டு நாடாளுமன்ற ஆசனத்தை இழந்த சம்பந்தன் ஐயா 1997 ஆம் ஆண்டு ஏறத்தாழ 14 ஆண்டுகளின் பின் மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2001 ஆம் ஆண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, 2002 இல் இடம்பெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளராகக் களம் இறங்கி அந்தத் தேர்தலில் மீண்டும் திருகோணமலை மாவட்டத்தில் 40 ஆயிரத்து 110 வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார்.

இதன்போது 18, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் விடுதலை கூட்டணியில் அங்கம் வகித்த சமயம் அதில் ஆனந்தசங்கரியும் சம்மந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினராகக் கிளிநொச்சி தொகுதியில் இருந்து தெரிவாகி இருந்தார்.



அப்போது விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கு நிலப் பரப்பில் 70 சதவீத ஆதிக்கத்தில் ஒரு நடைமுறை அரசை நிர்வகித்த காலம். அதன்காரணமாக விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதியாகத் தமிழர் விடுதலை கூட்டணியில் உள்ள சம்பந்தன் உட்பட அனைவரும் ஏற்றிருந்தனர். ஆனால் ஆனந்தசங்கரி மட்டும் அதை ஏற்காதமையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உள்பூசல் தலை தூக்கியது. இதன் காரணமாக அடுத்த தேர்தலான 2004 இல் தமிழர் விடுதலை கூட்டணி கட்சியில் வேட்பு மனு செய்யவும் உதயசூரியன் சின்னத்தை தரவும் ஆனந்த சங்கரி மறுத்தார்.

அதனால் பின்னர் 2004, பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுப் கட்சியில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு வீட்டுச் சின்னத்தில் அதன் சார்பில் வடக்கு கிழக்கில் இருந்து சரித்திரத்தில் முதன்முறையாக 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகினர். அந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நானும் (பா.அரியநேத்திரன்) தெரிவு செய்யப்பட்டேன். இரா.சம்பந்தன் ஐயா திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக 2004 இல் 47 ஆயிரத்து 735 வாக்குகளுடனும், 2010 இல் 24 ஆயிரத்து 448 வாக்குகளுடனும், 2015 இல் 33 ஆயிரத்து 834 வாக்குகளுடனும், மற்றும் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு 21 ஆயிரத்து 422 வாக்குகளுடனும் வெற்றிபெற்றிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கும் போது 2001 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம், மாமனிதர் ரவிராஜ் , ஆனந்த சங்கரி ஆகியோர் இலங்கைத் தமிழரசு கட்சியில் இருந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்தவர்கள் என்பதால் இலங்கைத் தமிழரசு கட்சி என்ற பெயர் தமிழர் விடுதலை கூட்டணியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகளில் தாய்க்கட்சியாக இருந்துள்ளதே உண்மை வரலாறு. சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கும்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி அதில் அங்கம் வகிக்கவில்லை எனக் கூற முற்படுகின்றமை தவறு என்பதை இதில் பதிவு செய்கிறேன். வரலாறுகளை உண்மையாக எழுதப்படவேண்டும் என்பதே எனது நோக்கம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவராக 2004 இல் இரா.சம்பந்தன் ஐயாவை 22 நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாமே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 2004 தொடக்கம் 2010 வரையும் வடக்குக் கிழக்கில் இருந்து தெரிவான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல முடியாத உயிர் அச்சுறுத்தல் இருந்தது. மாமனிதர்களான மட்டக்களப்பு ஜோசப்பரராசசிங்கம், யாழ்ப்பாணம் ரவிராஜ், சிவனேசன், அம்பாறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, ஐக்கியதேசியக் கட்சி கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகேஷ்வரன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட காலமும் 2004 தொடக்கம் 2009 வரை என்பதை மறுக்க முடியாது. உலக அரசியல் வரலாற்றில் ஒரே தடவை நாடாளுமன்றக் காலத்தில் நான்கு தமிழ் நாடராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்ட சம்பவமாக இது அமைந்தது. இந்த இக்கட்டான காலத்தில் இருந்து இன்றுவரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவராக இரா.சம்பந்தன் 89 வயதிலும் தொடர்ந்தும் உள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தலைவனுக்கு அகவை 89 நிறைவு!

தந்தை செல்வாவுக்குப் பின்னர் அஹிம்சைவழியில் தமிழர் விடுதலைக்காய் போராடிவரும் தமிழ்த் தேசியத் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவுக்கு இன்று அகவை 89. அவர் மேலும் பல ஆண்டுகள் இந்த மண்ணில் நீடு நலத்துடன் வாழ்ந்து தமிழர் உரிமை மீட்புக்காகப் போராடவேண்டும் என்று வாழ்த்தி உவந்தளிக்கப்பெற்ற வாழ்த்துப்பா.

**செந்தமிழர் நாமெம் இனவிடுதலைக்காய்**
**வெந்தழலில் விட்ட தியாகங்கள் எத்தனை?**
**சொந்தமொன் றுண்டெனவே நெஞ்சுறுத்தி**
**நிற்கையிலே**
**பந்த பாசமனைத்தும் பகையாடிச் சென்றதுவோ!**

**நாதியற்றிருந்த தமிழர்க்கு**
**நாயகனாய் இருந்தவனும்**
**பாதிவழி பயணிக்கையிலே**
**பகையாடிச் சென்றார்கள்!**

**வீரமறவர் இனத்தவர் நாம்**
**வீழ்வது நம்மின மரபன்று!**
**சோரம்போகா இனத்தின்**
**சேனாதிபதி எங்கள் சம்பந்தன்!**

**காந்தியம் பேசிய தந்தை**
**காடையனுக்கது புரியாதென்று**
**கடைசியில் தமிழனை**
**கடவுள்தான் காக்கனு மென்றார்!**

**தந்தையின் தமிழரசை நாட்டிட**
**தன்வாழ்வை ஆகுதியாக்கி நின்று**
**தாயகக் கனவொடு இராஜதந்திரத்துடன்**
**தமிழர்நம் விடிவுக்காய் வாழ்பவர் ஐயா நீவீர்!**

**தமிழரசின் பெருந்தலை வனாகிநின்று**
**தமிழர்தம் வாழ்வில் சுதந்திரமாய் வாழ்ந்திட**
**ஈழத்தமிழர் உரிமைக்காய், விடிவுக்காய்**
**அஹிம்சைவழி போராடுமெங்கள் சம்பந்தனே வாழி!**

**தந்தையின் வழியில் பயணித்த தணையன்**
**தந்தையின் பெயரைக் காத்த பெருவள்ளல்**
**தந்தையின் கட்சியை நேசித்த உத்தமர்**
**தந்தையாய் தமிழர்க்கு நீரின்று அகவை 89தனில்**
**தாயகம் மீட்டிட பலநூறாண்டு வாழ்கவென**
**வாழ்த்துகிறேன் சம்பந்தன் ஐயாவே வாழி நீடு!**

தெல்லியூர் சி.ஹரிகரன்
(உறுப்பினர் - வலி.வடக்கு பிரதேச சபை)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 272

**692.தற்சமயம் தமிழ் மக்களுக்காக கூட்டமைப்பும் கஜேந்திரர்களின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் எடுக்கும் முனைப்புக்கள் விடிவுகளைத் தருமா?**

இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, படைகளுடன் தமிழ்ப் பகுதிகளுக்குள் இந்தியா இறங்கியபோது அது எதுவித தீர்



சிறிம மணிவண்ணன்

வுமே இல்லை, தங்களது இலட்சியம் தனித்தமிழீழமே என உரைத்து உலகின் வல்லரசு ஒன்றின் இராணுவத்துடன் போர் தொடுத்த விடுதலைப் புலிகள், இந்தியப் படைகள் வெளியேறிய பின் அதே ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மாகாண சபையை இடைக்காலத் தீர்வாக ஏற்று அதிலிருந்து சுயாட்சியோ, சமஷ்டியோ சுயநிர்ணயத்துக்கு முன்னேறலாம் என்று தேர்தலுக்குத் தயாரானார்கள்.

மக்கள் ஒப்பந்தத்தை எதிர்த்துப் போர் தொடங்கப்பட்ட பொழுதே அதனை விடுதலைப் புலிகளுடன் விவாதித்து எதிர்ப்புக்களால் கட்டுப்படுத்தவில்லை. புத்திஜீவிகள் கூட தனித் தமிழீழம் போன்ற தீர்வு வரவில்லை என்றே அபிப்பிராயப்பட்டு, அப்போது அமைக்கப்பட்ட அத்திபாரங்களை ஏற்கவில்லை. அதேபோல் இப்பொழுது அதனை ஏற்றுத் தேர்தலுக்கு விடுதலைப் புலிகள் தயாரானபோதும் அது எப்படி, ஏன் இப்போது சாத்தியமாகிறது எனக் கேட்கவில்லை.

அப்பொழுது பல ஊடகவியலாளர்கள் இந்தப் போர் விடுதலைப் புலிகளுக்கு வெற்றியாகுமா? இந்திய இராணுவத்துக்கு தோல்வியாகுமா? என ஆராய்வுகளும் பின் களநிலைவரங்களை அறிவித்து ஓரளவுக்கு மக்களையும் உஷார் படுத்தினார்கள். விளைவுகளை - தமிழ் மக்க



கஜேந்திரகுமார்

ளுக்கு அவை தந்த தாக்கங்களை - யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. போரின் போட்டிகளை செய்தியாகக் கொண்டு சேர்த்தார்கள். கேள்விகள் கேட்கக் கூடிய சூழ்நிலையில் மக்கள் அப்போது இருக்கவில்லை.

அதன் தொனியில், 3 பெப்ரவரி 22 காலைக்கதிரின் 'இனி இது இரகசியம் அல்ல' என்ற பகுதியில் ஆசிரியர் வித்தியாதரனால் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

'அது வெற்றியா, தோல்வியா என்பது வேறு விடயம். ஆனால் தமிழர்கள் மத்தியில் களத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் அது பலத்த அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது மட்டும் உண்மை. இந்த அருமையான களநிலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக ரெலோ பிரதிநிதிகளுக்கு கஜேந்திரரர்கள் நன்றி சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். தமிழ்த் தேசியப் பரப்பில் நின்ற தமிழ்க்கட்சிகளை எல்லாம் இழுத்து வந்து, ஒரு பக்கத்தில் நிறுத்தி ஒரு கோட்டை வரைந்து இந்தப் பக்கம் எங்களுக்கு, அந்தப் பக்கம் உங்களுக்கு எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அரசியல் சித்து விளையாட்டு நடத்துவதற்கான மைதானத்தை 'கிளியர்' பண்ணிக் கொடுத்தமையின் சூத்திரதாரிகள் அந்தப் பிரதிநிதிகள்தான்'



ஈழத்தில் இந்தியப் படைகள்

- திரும்ப ஊடகங்கள் இது அவர் பக்கத்துக்கு வெற்றியா, மற்றவருக்கு வெற்றியா என்று மைதானத்தில் நடக்கும் போட்டிக்கு வர்ணனைகளுக்குத் தயாராகின்றார்களே ஒழிய இது தமிழ் மக்களுக்குத் தேவையானதுதானா? அவர்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் என ஆராய்ந்து கோடுகள் போடுவதாகத் தெரியவில்லை. ஜனநாயக அரசியல் அதன் செய்திகள் என்ற வாதங்கள் இருக்கும். ஆகவே, தமிழ் மக்கள் தங்கள் அனுபவங்களில் தங்களுக்குள்ளேயே கேள்விகள் கேட்டு இது மக்களுக்காகவா அல்லது அரசியல் தலைமைகளுக்காகவா என்றும் ஊடகங்கள் வெற்றி, தோல்வி என்ற செய்திகளில் தான் நீந்தப் போகிறார்களா எனவும் கேட்க வேண்டும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை தமிழ் மக்களுக்கு இது வரை நீதியான தீர்வு ஒன்றும் நடைமுறைப்படுத்தவில்லை, ஆக்கப்பட்ட 13 ஆம் திருத்தமும் நடைமுறைப்படுத்தப் படவில்லை, சமஷ்டித் தீர்வுதான் வேண்டுமென்று இதனை நடத்தியிருப்பாராயின் அது இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் சில அழுத்தங்களை கொடுத்திருக்கும். கூட்டமைப்பின் சமர்ப்பணத்தோடு இந்தியாவிற்கும் அழுத்தங்கள் கூடியிருக்கும். ஆனால் அவர்களோ 13 ஆம் திருத்தத்தை அமுல் படுத்தக் கோரி இந்தியாவுக்கு கூட்டமைப்பினர் சமர்ப்பணம் கொடுத்திருக்கிறார்கள், இது துரோகம் என்று கூச்சலிட்டு, இப்படிக் கடிதம் கொடுத்தவர்கள் இந்தியாவின் பக்கம் அடிவருடிகள், நாங்கள் அவர்களை எதிர்க்கிறோம், எங்களால் தான் தீர்வு தர முடியும் என்று கூறி இதனை நடத்துகிறார்கள். அதே சமயம் அந்தத் தீர்வு சுயநிர்ணய உரிமைகளில் தரப்பட வேண்டும் என்றும் அறிவிக்கிறார்கள்.

இது தமிழ்த் தலைமைகளிடையே உள்ளபோட்டிகளின் வெளிப்பாடேயொழிய தமிழ் மக்களின் விடிவு பற்றியதல்ல. பகைமைகளுக்குத் தூபம் போட்டு, இன்றும் ஆதரவு தளத்திற்காக விடுதலைப் புலிகள் அடையாளப்படுத்திய சிவப்பு, மஞ்சள் வர்ணத்தில் சேட்டுக்கள், கொடிகள், திலீபன் நினைவிடத்திலிருந்து ஆரம்பித்து, கிட்டு பூங்காவில் முடித்ததும், அவர்களை மீளெழுப்புவதாக அமைவது ஆகவும், இந்தியாவிற்கு மாறான பிம்பத்தைத்தான் தெரிவிக்கின்றன.

பிரபாகரனது படத்தை மொபைலில் வைத்திருந்தவர்கள் விடுதலைப் புலிகளை மீளக்கட்டியெழுப்புகிறார்கள் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அடைக்கப்படுகிறார்கள். ஏன் யாழ்ப்பாண மேயர் மணிவண்ணனையே அவற்றின் கீழ் விடுதலைப் புலிகளின் பொலிஸ் அணிந்த நிறத்தில் மாநகர சபை ஊழியர்களுக்கு சீருடை தந்தார் என்று கைதாக்கியவர்கள், இந்த ஊர்வலத்திற்கு தொட்டில் ஆட்டி விட்டுள்ளார்கள். அவர்களுக்கும் பிரேமதாஸா போல் இந்தியாவை அப்புறத்தில் வைக்கத் தேவையுள்ளது.



கஜேந்திரன்

ஆகவே தமிழ் மக்களது விரல்களாலேயே கண்களைக் குத்தப் பாவிக்கிறார்கள்.

உணர்ச்சிகளால் அவர்களை கமுக மரத்தில் ஏற்றிவிட நாட்டிலும் புலம்பெயரிலும் (புலன்போன) சிலர் இருக்கிறார்கள். தமிழ் மக்கள் தங்களது அனுபவங்களில் இந்த திருவிழாக்களையும் புரிந்து கொள்ள வேண்டும்.

(வளரும்)



**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** வாழ்க்கையில் வெற்றி பெற படிப்பு வேண்டும் என்கிறார்கள் சில பேர், பணம் வேண்டும் என்கிறார்கள் வேறு சில பேர், மூளை வேண்டும் என்கிறார்கள் இன்னும் சில பேர், உதவி வேண்டும் என்கிறார்கள் பலபேர். இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**பதில் :-** வாழ்க்கையில் வெற்றி பெற இவை எவையுமே தேவையில்லை என்பதுதான் என் முடிவு. நாம் அடைய வேண்டிய இலக்கை இனங்கண்டு அதனை அடைவதற்கான உறுதியோடு ஒரு முகமாய்ச் செயற்பட்டால் நிச்சயம் வாழ்க்கையில் நாம் வெற்றிபெற்று விடலாம்.

அண்மையில் முகநூலில் சுவிஸ்லாந்தில் வாழும் எனது நண்பர் பிரம்மஸ்ரீ சரஹணபவானந்தக் குருக்கள் அவர்கள் ‘தன்னம்பிக்கை’ என்ற தலைப்பில் ஒரு பதிவினை இட்டிருந்தார். அது அவரது சொந்தக் கருத்தா அல்லது வேறெங்கேனும் இருந்து தேர்ந்தெடுத்த கருத்தா என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் அப்பதிவு எனக்கு நிரம்பப் பிடித்துப் போனது. அப்பதிவினைக் கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள்.

ஒரு ஆரோக்கியமான ஆண் உடலுறவில் ஈடுபட்டவுடன் வெளியேறும் விந்தணுக்களின் எண்ணிக்கை 400 மில்லியன் என்று அறிவியல் கூறுகிறது. அந்தளவு விந்தணுக்களும் ஒரு பெண்ணின் கர்ப்பப்பையில் உள்ள ஒரு இடத்தைத் தொட்டால் 400 மில்லியன் குழந்தைகள் உருவாக்கப்பட்டு விடுவார்கள்.

இந்த 400 மில்லியன் விந்தணுக்கள் தாயின் கருப்பையை நோக்கிப் பைத்தியம் போல் ஓடும்போது 300 தொடக்கம் 500 விந்தணுக்கள் மட்டுமே உயிர் வாழ்கின்றனவாம். மீதமுள்ள அணுக்கள் வழியில் சோர்வினால் அல்லது தோல்வியால் இறந்து போகின்றனவாம். மீதமுள்ள 300 தொடக்கம் 500 அளவான விந்தணுக்கள் மட்டுமே கருமுட்டையை அடை



யுமாம். அவற்றில் மிகவும் வலுவான ஒரேயொரு விந்தணு மட்டுமே கருமுட்டையைத் தனக்கு உரமாக்கி வளர்கின்றதாம். அந்த அதிர்ஷ்ட விந்தில் ஒன்றாகத்தான் நீங்கள் அல்லது நான் அல்லது நாம் அனைவரும் இருக்கிறோம்.

இந்த விந்தணுக்களின் மாபெரும் போட்டியைப் பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

குறித்த ஒரு விந்தணுவாய் உங்கள் தாயின் வயிற்றினுள் நீங்கள் ஓடிய போது உங்களுக்குக் கண்கள், கைகள், கால்கள், தலை என எதுவுமே இருக்கவில்லை. அப்படியிருந்தும் அந்தப் போட்டியில் நீங்கள் வெற்றி பெற்றீர்கள்.

நீங்கள் ஓடியபோது உங்களிடம் எந்தவிதமான சான்றிதழ்களும் இருக்கவில்லை. அதுமட்டுமல்ல, அப்போது உங்களுக்கு மூளைகூட இருக்கவில்லை. அப்படியிருந்தும் அந்தப் போட்டியில் நீங்கள் வெற்றி பெற்றீர்கள்.

நீங்கள் அந்தப் போட்டியில் ஓடும்போது உங்களுக்குக் கல்வி இல்லை, யாரும் உங்களுக்கு உதவி செய்யவில்லை. ஆனாலும் நீங்கள் அந்தப் போட்டியில் வென்றீர்கள்.

ஏனென்றால் அந்தப் போட்டியில் ஒரு விந்தணுவாய் நீங்கள் ஓடும்போது உங்களுக்கு ஓர் இலக்கு மட்டும்தான் இருந்தது. வெற்றிபெறும் ஒரே விருப்புடன் நீங்கள் அந்த இலக்கு நோக்கி ஓடினீர்கள். அதனால்த்தான் இறுதியில் நீங்கள் வென்றீர்கள்.

எத்தனை பெரிய உண்மை இங்கு இலகுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நோக்கமும் முயற்சியும் தான் வெற்றியினுடைய அடிப்படைகள் என்பதை இதைவிட இலகுவாய்ச் சொல்லமுடியுமா? - தெரியவில்லை! இந்த நல்ல செய்தியைப் பதிவேற்றிய குருக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தக்க கேள்வி ஒன்றால் இச்செய்தியைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த உங்களுக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சீய்ய்ய் போங்ங்கோவ் வாரிதியார்! எனக்கு வெட்கம் வெட்கமா வருகுதாக்கும்**

**2. கேள்வி:-** ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் ‘கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் விழாக்களுக்கு வாழ்த்துச் செய்தி வெளியிட்டுவரும் தி.மு.க.வினர் இந்துமத விழாக்களுக்கு மட்டும் வாழ்த்துச் செய்தி வெளியிடுவதில்லையே. அது ஏன்?’ என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு, தமிழ்நாட்டு அமைச்சர் ராஜா அவர்கள், எந்த ஒரு மதத்தையும் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் எல்லா மதங்களும், கடவுளால்தான் உலகம் படைக்கப்பட்டது போன்ற மூடக்கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன என்றும் கூறி, ஆனாலும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களை ஸ்தாபித்தவர்களின் பெயரும், காலமும் தெரிவதால்தான் அம்மதத்தவரின் விழாக்களுக்குத் தாம் வாழ்த்துத் தெரிவிப்பதாகவும், இந்து மதத்தை ஸ்தாபித்தவரின் காலமோ, பெயரோ தெரியாததால்தான் அந்த மதத்தின் விழாக்களுக்குத் தாம் வாழ்த்துச் சொல்வதில்லை என்றும் கூறிய இணையப் பதிவினைப் பார்த்தீர்களா?

**பதில் :-** பார்த்தேன்! பார்த்தேன்! பார்த்தேன்! இவர்கள்தான் தமிழினத்தின் தலைவர்களாம். வெட்கக்கேடு! உலகத்தைக் கடவுள் படைக்கவில்லை என்றே வைத்துக் கொள்வோம். கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்களும், ஆயிரக்கணக்கான பால்வெளிகளும் (அடைமலறயல) இப் பிரபஞ்சத்தினுள் இயங்கிக் கொண்டிருப்பதாய் வானியல் அறிஞர்கள் சொல்கிறார்கள். அவை ஓர் ஒழுங்கிற்குள் அமைந்து இயங்கிக் கொண்டிருப்பதாகவும் அவர்களே உரைக்கின்றார்கள். அவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒழுங்கு, சற்றேனும் மாறுபடுமானால்கூட இவ் அண்டங்கள் எல்லாம் ஒன்றோடொன்று மோதிச் சிதைந்துவிடுமாம்.

அவ் அண்டங்கள் அனைத்தும் சடங்கள். அவற்றிற்கென அறிவு ஏதும் இல்லை. அப்படியிருக்க அவற்றிற்குள் இவ் ஒழுங்கு வந்தது எப்படி? அவ் ஒழுங்கை அவற்றிற்குள் புகுத்திக் காத்துவருகிற சக்தி எது? முடிந்தால் அமைச்சர் இக் கேள்விக்குப் பதில் சொல்லட்டும். ஒன்றினை இல்லை என்று சொல்ல அறிவு தேவையில்லை. இருக்கிறது என்று நிறுவத்தான் அறிவு தேவை. நமது ஞானிகளெல்லாம் இரண்டாம் வேலையைத்தான் செய்தார்கள். நம் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் முதலாம் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனை வைத்து அவர்கள் யார் என்று கண்டுகொள்ளுங்கள்.

இயேசுவும், நபியும் காலத்தால் அறியப்படுபவர்கள் என்பது உண்மைதான். நம் மதச் சட்டங்களை உருவாக்கியவர்களின் பெயர்களும், காலமும் உறுதிப்படத் தெரியவில்லை என்பதும்கூட உண்மைதான். இது இந்து மதத்திற்கான சிறப்பே தவிர குறையில்லை. நம் தமிழ் மொழியினதும் தமிழினத்தினதும் தொன்மையை நிறுவவேண்டும் எனக் கடும் முயற்சிசெய்வதாய்ப் பேசித்திரியும் தி.மு.க.வைச் சேர்ந்த ராஜா போன்ற அமைச்சர்களுக்கு எந்த ஒன்றினதும் நீண்ட தொன்மை என்பது அதன் தகுதியே தவிர, தகுதியின்மையன்று என்பது தெரியாமல் இருப்பது வியப்புத்தான். தமிழின் அகரம் முதலான அட்சரங்களைக் கண்டு பிடித்தவர் யார்? என்ற கேள்விக்கு அமைச்சரால் பதில் சொல்ல முடியுமா? அப்படியாயின் ஸ்தாபகர் பெயர் தெரியாத நம் தமிழ் மொழியும்கூட, தாழ்ந்ததுதானா?

அமைச்சர் ராஜாவின் கருத்துக்கள் இந்து மதத்தை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. தமிழ்நாட்டை, தம் தீவிரமுயற்சியால் கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்த்த முயன்றுவரும் முதலமைச்சர் ஸ்ராலின் அவர்களைத்தான் அது பாதிக்கப் போகிறது.

இவர்கள் வாழ்த்துச் சொல்லாமல் விடுவது நம் இந்துமதத்திற்கு நல்லது தான். ராஜா கடவுளை அழிப்பதாய் நினைத்துத் தன்கட்சியை அழிக்காமல் இருந்தால் சரிதான்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘கடவுள் ஏன் கல்லானான்? கல்லாய்ப் போன மனிதர்களாலே!’**

**ஹி.. ஹி.. ஹி..**

**3. கேள்வி:-** தொடர்ந்து கேள்வி, பதில் எழுதுகிறீர்களே! இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்! கேள்வி பெரிதா? பதில் பெரிதா?

**பதில்:-** என்னை மடக்கிவிட்டதாய் நினைப்போ? சந்தேகமேயில்லை. பதிலைவிடக் கேள்விதான் பெரியது. கேள்வி இல்லாவிட்டால் பதில் ஏது? கேள்வியால்த் தான் பதில் பிறக்கிறது. கேள்விதான் காரணம். பதில் காரியம்தான். காரணம் இல்லையேல் காரியம் ஏது? அண்மையில் பழைய ஆனந்தவிகடன் ஒன்றில் ஒரிஸா மாநிலத்தின் முதன்மைச் செயலாளராய் இருந்துவரும் ஆர். பாலகிருஷ்ணன் என்பவருடைய ஒரு கட்டுரையைப் படித்தேன். அதில் அவர், கேள்விகள், விடைகள் இவை இரண்டில் கேள்விக்குத்தான் முதல் மரியாதை. முதலில் பிறந்து மூத்தது என்பதால் மட்டுமில்லை. விடைதெரியாமல் வாழ்ந்துவிடலாம். கேள்விகள் இல்லாத வாழ்க்கையில் உப்புச்சப்பே இருக்காது என்று எழுதியிருந்தார். அவர் கருத்தை மிகவும் ரசித்தேன். மீண்டும் சொல்கிறேன். பதில் சொல்லும் என்னை விட, கேள்வி கேட்கும் நீங்கள்தான் பெரியவர் ஐயா! இப்போது உங்களுக்குத் திருப்தியா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ரொம்பத் தான் தன்னடக்கம் காட்டிறார் போங்கோ, வாரிதியாருக்கு இதெல்லாம் ‘ஜுஜுப்பி’ விளையாட்டாக்கும்.**

(08ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய சுதந்திரதின நிகழ்வுகளை புறக்கணித்தனர் சஜித் தரப்பினர்



தேசிய சுதந்திரதின நிகழ்வுகளை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்துள்ளது.

இலங்கையின் 74 ஆவது சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்டது.

74 ஆவது சுதந்திரதின நிகழ்வுகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று காலை முதல் நடைபெற்றன.

'சவால்களை வெற்றி கொண்ட வளமான நாளையும் சுபீட்சமான தாய்நாடும்' என்ற தொனிப் பொருளில் இம்முறை சுதந்திரதின பிரதான நிகழ்வுகள் நடைபெறுகின்றமையுடன் நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை காணப்படுவதால் சுகாதார வழிமுறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு தேசத்தின் அபிமானத்தைக் காக்கும் வகையில் வழக்கம்போன்று எவ்வித குறைபாடுகளுமின்றி கம்பீரமானதாகவும் எளிமையான முறையிலும் அனைத்து நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அணி புறக்கணித்துள்ளது.

இதேவேளை, தேசிய சுதந்திரதின கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளாதிருக்க பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தீர்மானித்துள்ளார் என கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ அறிவித்திருந்தார்.

பொரளையிலுள்ள தேவாலயம் ஒன்றில் கைகுண்டு மீட்கப்பட்ட சம்பவம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகள் திருப்தியளிக்காமை காரணமாக பேராயர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணம் பல்கலைக்குள் நுழையத் தடை வாயிலில் கறுப்புத் துணி கட்டிய மாணவர்கள்!



யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் கறுப்பு நிற துணி கட்டப்பட்டு நேற்றைய சுதந்திரதினத்தை கரி நாளாக மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முள்ளிவாய்க்காலில் இடம்பெறும் சிவில் சமூகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திரதினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் முகமாக, பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்காலுக்கு செல்வதற்காக, தமது வாகனங்களை பல்கலைக்கழகத்தில் தரித்துவிட்டு செல்ல முற்பட்ட நிலையில், பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மாணவர்கள் உள்நுழைய அனுமதி மறுக்கப்பட்டதோடு, பரமேஸ்வரா ஆலயத்துக்கு செல்பவர்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று (நேற்று) சுதந்திரதினம் என கொடியேற்றுகிறீர்கள். ஆனால் பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள், ஆலய வழிபாட்டை மேற்கொள்பவர்கள் செல்ல முடியாதா? என மாணவர்களால் கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுபவர்களையே நாங்கள் அனுமதிக்கவில்லை என பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மாணவர்களால் சுதந்திர தினம் கரி நாள் எனத் தெரிவித்து கறுப்புத் துணி பிரதான வாயிலில் கட்டப்பட்டது.

## இரா.சம்பந்தன் ஐயாவுக்கு ......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

2015 செப்ரெம்பர் 03 தொடக்கம் 2018 டிசெம்பர் 18 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததன் மூலம், அந்தப் பதவியை வகித்த இரண்டாவது தமிழர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார். இன்று 89 வருட வாழ்வில் 29 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்திருக்கிறார் இரா.சம்பந்தன்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றின் முக்கிய காலகட்டங்கள், திருப்புமுனைகள் என்பவற்றை நேரடியாகப் பார்த்த, அதில் பலவற்றில் பங்காளியாக இருந்த பழுத்த அனுபவம் மிக்க தலைவர் இரா. சம்பந்தன் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதுபோலவே நாடாளுமன்ற மரபுகளை, நடைமுறைகளை நன்கறிந்த, அனுபவம் மிக்க சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுள் இரா. சம்பந்தன் முக்கியமானவர் என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இன்று கூட அவர் நாடாளுமன்றத்தில் எழுந்து உரையாற்றினால், அந்த உரை பெருமளவிற்கு அமைதியாக கேட்கப்படுமளவிற்கு மதிப்பு மிக்க மனிதராகவே அவர் பார்க்கப்படுகிறார். அண்மைய ஆண்டுகளில் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சந்தர்ப்பங்கள் குறைவு என்றாலும், அவர் ஆற்றியிருந்த ஒரு சில உரைகள் கூட ஆழமானது எனவும், அர்த்தபுஷ்டியுள்ளவையாகவும் அமைந்திருந்தன.

அவரது சில நாடாளுமன்ற உரைகள், இலங்கை நாடாளுமன்றம் கண்ட ஆகச்சிறந்த உரைகள் பட்டியலில் நிச்சயம் இடம்பெறும் தகை மிக்கவை. ஆனால் தற்போது அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதில்லை என்பது மட்டுமல்ல, நாடாளுமன்றத்துக்கு செல்வது கூட மிகக் குறைவு என்பது வருத்தத்துக்குரிய விடயமாக இருக்கிறது.

இது எல்லாவற்றிக்கும் மேலாகத் தந்தை செல்வா காலத்திலும், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் காலத்திலும் இணைந்து தமிழ்த் தேசிய அரசியலில் செயற்பட்ட ஒரு தலைவர் இரா. சம்பந்தன் மட்டுமே.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளையால் கடந்த 2014 ஆம் ஆண்டு 'தாயகத் தலைமகன்' எனும் உயர் கௌரவம் வழங்கப்பட்டது.

கனேடிய தமிழர் பேரவை 2016 ஜனவரியில் 'வாழும் வீரர்' எனும் கௌரவம் வழங்கப்பட்டது. 89,வயதிலும் உள்ளம் சோராமல் இலங்கை நாடாளுமன்றத்தில் நாடாளு மன்ற உறுப்பினராகப் பதவியில் உள்ளவர் என்றால் இலங்கை வரலாற்றில் இரா.சம்பந்தன் மட்டுமே.

இவ்வாறான தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் இன்று 89 ஆவது பிறந்த நாளில் கால்பதிக்கிறார்.

திருகோணமலை மாவட்ட மக்களின் வாக்குகளால் தெரிவாகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவராகவும், வடக்கு கிழக்கு வாழ் தமிழினத்தின் தலைவராகவும் சர்வதேசத்தின் தலைவர்களால் மதிக்கப்படும் ஒருவராக இரா.சம்பந்தன் உள்ளார் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

## பாட்டும் நானே? ........



(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**4. கேள்வி:-** கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினரின் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான பேரணி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** என்னத்தை நினைப்பது? எல்லாத் தலைவர்களும் ஒரு பக்கமாய் நிற்க, தான் தனித்து நின்று மக்களுக்குத் தன்னை இனங்காட்ட முயலுகிறார் போல. இந்தியாவைப் பகைத்துக் கொள்ள நினைக்கும் இவரது இச் செயல் புத்திசாலித்தனமான செயலாய்ப்படவில்லை. இலட்சியங்கள் நடைமுறைப்படுத்தப்படக் கூடியனவாய் இருக்கவேண்டும். கஜேந்திரகுமார் அணியினர் ஆகாயத்தைத் தொடுமளவான இலட்சியம் பேசுகிறார்கள். ஆனால் அவர்களிடம் கூரையில் ஏறுவதற்குக் கூட ஏணி ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. இப்படிப் பேசி, பொய் உணர்ச்சியில் மயங்கி நிற்கும் நம் மக்களை ஈர்த்துத் தேர்தலை வெல்லலாமோ என்னவோ? இனத்தின் உயர்வு நோக்கி ஒரு துரும்பைத்தானும் இவர்களால் அசைக்க முடியாதுபோல் தெரிகிறது. அவர்களின் முதல்நாள் ஊர்வலத்தைத் தொலைக்காட்சிச் செய்தியில் பார்த்தேன். 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான பேரணி என்பதாலோ என்னவோ அதில் 13 பேரளவில்த்தான் சென்றுகொடிருந்தார்கள். அது பேரணி அல்ல! வெறும் 13 பேர் அணியாகத்தான் தெரிந்தது. பிறகு, பிறகு கூட்டம் சேர்ந்ததையும் காண முடிந்தது. அது சேர்ந்த கூட்டமா? சேர்த்த கூட்டமா? தெரியவில்லை. தகுதியானவர்களைக் காலம் தான் தீர்மானிக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'ஊரொடு பகைக்கின் வேரொடு கெடும்.'**

**5. கேள்வி:-** இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களால் செய்யப்படும் அத்துமீறல்களை எதிர்த்து வடக்கில் கடுமையானப் போராட்டங்கள் கிளம்பி இருக்கின்றனவே. தமக்கு அநீதி நடப்பதாகத் தமிழ் நாட்டிலும் மீனவர்கள் போராடுகிறார்கள். இதில் யார் சொல்வது உண்மை? சமாதானம் செய்யவந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் நம் மீனவர்கள் எதிர்த்து நின்றமையைக் கவனித்தீர்களா?

**பதில் :-** கவனித்தேன்! இந்திய, இலங்கை மீனவர்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிறார்கள். குடும்பப் பெண்ணும் தன்னைக் கற்புக்கரசி என்கிறாள். பரத்தையும் தன்னைக் கற்புக்கரசி என்கிறாள். அதுதான் இப்போதைய பிரச்சினை. இதில் யார் பரத்தை? யார் கற்புக்கரசி? என்பது பகிரங்கமாய்த் தெரிந்தாலும், பரத்தையின் பின்னால் இருக்கும் பலம் தெரிந்து அவளை யாரும் உறுதியாய்க் கண்டிக்க முன்வருகிறார்கள் இல்லை. இதுதான் இப்போதைய பிரச்சினை.

போராட்டக் காலத்தில் நம் கடல் வளத்தை நீண்ட நாள்களாகப் பயன்படுத்தி வயிறு நிரப்பி ருசிகண்ட இந்திய மீனவர்கள் அந்த அத்துமீறல் செயல்களைத் தம் உரிமையாக்கப் பார்க்கிறார்கள். இரத்த உறவு, இரத்த உறவு என்று வாய்கிழியப் பேசுகிறவர்கள், பல தசாப்தங்களாய்ப் போரினால் பாதிக்கப்பட்ட நம் மீனவர்களின் வாழ்வைச் சூறையாட நினைப்பது கொடுமையிலும் கொடுமை.

தம் வாக்கு வங்கியைச் சிதைக்க விரும்பாத அங்குள்ள மாநில, மத்திய அரசுகளும் இந்தக் கொடும் செயலைக் கண்டும் காணாமல் இருக்கவே விரும்புகின்றன. நம் நாட்டு அரசுக்கோ, 'தமிழர்களுக்கான இழப்புத்தானே! இது எப்படியும் நடந்துவிட்டுப் போகட்டும்' என்ற மெத்தனம். இந்தியாவிடம் தமக்கான பல தேவைகள் உள்ள இவ்வேளையில் இந்திய அரசோடு முரண்பட்டுக் கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை. இவைதான் யதார்த்த நிலைகள்.

'வல்லான் வகுத்ததே வழி' என்பது தெரிவதால், இந்தப் பிரச்சினையில் நம் தமிழ்த் தலைவர்களும் பெயருக்கு வெறுமனே முணுமுணுத்துவிட்டு விலகிக் கொள்கிறார்கள். அரசைச் சார்ந்திருக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸின் நிலைமைதான் சங்கடமாகியிருக்கிறது. அவரை நோக்கித்தான் கேள்விகள் பாய்கின்றன. இந் நிலையில் டக்ளஸால் மட்டுமல்ல, வேறு எவராலும் ஏதும் செய்ய முடியாது என்பதுதான் உண்மைநிலை. நம் மீனவர்களே அவர்களின் படகுகளைச் சிறைப் பிடித்ததாய்க் கடைசியாக செய்தி வந்திருக்கிறது. 'பொறுத்தது போதும் பொங்கி எழு' என்ற அவர்களது முடிவு சரிபோலத்தான் படுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அடிஉதவு மாப்போல் அண்ணன் தம்பியும் உதவாதுங்கோ! ஹி..ஹி..**

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சமூக செயற்பாட்டாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் அணிந்திரண்டு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

முன்னதாக முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உயிரிழந்த மக்களின் நினைவாக சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தி விட்டு கவனவீர்ப்புப் பேரணியைத் தொடங்கினார்கள். நடைபயணமாக முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்ட கவனவீர்ப்புக்காரர்கள் வட்டுவாகல் கோட்டபாய கடற்டை தளத்தின் முன்னால் நின்று தங்கள் கவனவீர்ப்பை உரக்க வெளிப்படுத்தினார்கள்.

2009ஆம் ஆண்டு இந்தப் பாலம் ஊடாகவே தங்கள் பிள்ளைகள், உறவுகள், கணவன்மார்களை இராணுவத்தினரிடம் கையளித்துவிட்டு அனைத்தையும் இழந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்ற இறுதிப் பாதையாக இந்த வட்டுவாகல் பாலம் காணப்படுகின்றது. இந்தப் பாலத்தில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு மக்கள் கவனவீர்ப்பை வெளிப்படுத்தி செல்வவுரம் வரை கோஷங்களை எழுப்பியவாறு சென்று செல்வபுரம் புனித யூதா தேவாலயம் வரை சென்றடைந்து அங்கு தங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தினார்கள்

இந்தக் கவனவீர்ப்புப் பேரணியின் போது முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு நில மீட்புப் போராட்டக் குழுவினரும் தங்களை இணைத்துக்கொண்டார்கள்.

நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவருக்கான நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இதன்போது கோரிக்கை விடுத்து தங்கள் கவனயீர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

கவனவீர்ப்புப் போராட்டம் தொடங்கிய இடம் தொடக்கம் நிறைவடைந்த இடம் வரை சிவில் உடை தரித்த புலனாய்வாளர்களின் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் பலர் ஒளிப்படங்கள் எடுத்தார்கள். இது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களை அச்சுறுத்தும் செயற்பாடு என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தார்கள்.

---

## தமிழர் தாயகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இன்று (நேற்று) பெப்ரவரி 4 ஆம் நாள். ஆங்கிலேயர் 74 வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு சுதந்திரம் அளித்துச் சென்ற நாள். ஆனால், அந்த நாளை சிங்கள தேசம் தனக்கு மட்டுமே சுதந்திர நாளாக்கி, தமிழ் இனத்தை அடிமைப்படுத்தி, அதைத் தமிழருக்கான கரிநாள் ஆக்கியது.

காலங்காலமாக இது தொடர்கின்றது. அதற்கு எதிராகக் கதைப்பவர்களும், செயற்பட்டவர்களும் குண்டாந்தடியால் அடிக்கப்பட்டனர்.

அடக்கு முறைகளின் ஒரு கட்டமாக 1956 தனிச் சிங்களச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியது.

சிங்களம் படிக்காத அரச உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த அநீதிகள் அரங்கேறிய அதேநேரம், தலைநகர் கொழும்பில் தமிழர்கள் மீது இனஅழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழர்கள் முதுகில் சிங்கள ஸ்ரீ சூடுவைக்கப்பட்டது.

பச்சைக் குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வித்தியாசம் இன்றி, கொதிக்கும் தாரப் பீப்பாய்க்கள், தோசைக்கல் என்பவற்றில் அவர்கள் போடப்பட்டனர்.

இந்த அவலம் போல் காலத்துக்குக் காலம் எங்காவது ஒரு மூலையில், தமிழர்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் போதெல்லாம் இன அழிப்பு என்னும் பயங்கரத்தை மேற்கொண்டு தமிழர்களின் உணர்வு அழிக்கப்பட்டது.

மேற்படி எல்லாத் தடைகளையும் தாண்டி, மக்களின் பேராதரவுடன் மேற்கொள்ளப்பட்ட தாயக விடுதலைப் போராட்டம் கூட 2009 மே 18 இல் இதே முள்ளிவாய்க்காலில் மௌனிக்கச் செய்யப்பட்டது.

பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைக் காட்டி, சர்வதேசத்தின் உதவிகளைப் பெற்று, தமிழர்களின் உரிமைப் போராட்டம் இந்த மண்ணிலே மௌனிக்கச் செய்யப்பட்டது.

இதே இடத்தில்தான் எமது உறவுகளை அரச படைகளிடம் கையளித்துவிட்டு, எம் உறவுகளைத் தேடி வயோதிபர்கள் ஆகிய நாம் போராடி வருகின்றோம்.

எமது உறவுகளைத் தேடும் எமது போராட்டமானது, வெறுமனே உறவுகளைத் தேடும் போராட்டம் அன்று, எமக்கான உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்துக்கான தொடக்கப் புள்ளியே இது.

எமது உறவுகளுடன் வாழும் உரிமைக்காக, அவர்களுக்கு என்ன நடந்தது என்று உண்மையை அறியும் உரிமைக்காக, அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களை நீதியின் முன் நிறுத்தியே தீர வேண்டும் என்ற எம் உணர்வுக்கான போராட்டமே இது.

இந்தப் போராட்ட நெருப்பானது, தமிழ் உணர்வாளர்கள், பற்றுள்ளவர்கள் அனைவராலும் வளர்ப்பிக்கப்பட்டு, எமது உரிமையைப் பெறும் சாத்வீகப் போராட்டம் என்னும் பெரும் நெருப்பாக தமிழர்கள் நெஞ்சிலே ஏற்றப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய இனம் என்ற கௌரவத்துடன் தமிழர்கள் வாழ வழி செய்யப்படவேண்டும். அற்பசொற்ப சலுகைகளுக்காகவும், தம் சொந்த ஆசாபாசங்களுக்காகவும் சிங்கள அரசுக்குத் துணை போனவர்களும், அவர்களுடன் சேர்ந்து இருப்பவர்களும் தம் இனத்துக்குத் துரோகம் செய்வதை உணர்ந்து திருந்த வேண்டும் அல்லது மக்கள் போராட்டம் அவர்களைத் திருத்த வேண்டும்.

இலட்சக்கணக்கானவர்களை இன அழிப்புச் செய்த இந்த அரசு, அதற்கான நீதியை மறுதலிக்கும் அதேநேரம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், தமிழர்களின் காணிகள் ஆக்கிரமிப்பு, புத்தவிகாரைகள் அமைப்பு, இந்துக் கோயில்களை விகாரையாக்கும் முயற்சி, புனித பூமித் திட்டம் ஆகியவற்றை வேகமாக மேற்கொண்டு வருகின்றது.

போதைவஸ்துப் பாவனை தமிழர்களிடையே திட்டமிட்டுப் புகுத்தப்பட்டு கலாசாரப் பிறழ்வுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இவற்றைக் கண்டும் காணாதது போல எமது அரசியல் தலைமைகள் உள்ளனர். இதை நாமும் பாரத்துக் கொண்டு மௌனமாக இருக்கப் போகின்றோமா? - என்றுள்ளது.

---

## பொறுப்பை மறந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி, அந்தப் பொறுப்புகளை மறந்து உரிமைகள் பற்றி மாத்திரம் பேசுவது உகந்ததல்ல என்றும் குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல், கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் இடம்பெற்ற 74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டு தேசத்துக்காக உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டுக்கு முன்னால் காணப்படும் சவால்களை வெற்றிகொள்ள வேண்டுமாயின், அர்ப்பணிப்புகளின் ஊடாகவே அவை சாத்தியப்படும். கடினமான காலங்கள் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அவ்வாறான கடினமான காலங்களை எதிர்கொள்வதற்கு, பலமிக்க மனிதர்கள் அவசியம். நாம் தற்காலத்தில் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் அனைத்தும் நீண்டகாலப் பிரச்சினைகள் அல்ல. நேர்மறையான அணுகுமுறைகளுடன் அவ்வாறான பிரச்சினைகளுக்குப் பதிலளிக்க முடியும்.

நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டு பிடித்துக்கொண்டு பல வருடங்கள் பின்னோக்கிச் செல்வதை விட, அவற்றுக்கான நீண்டகால மற்றும் குறுகியகாலத் தீர்வுகளைக் காண்பதே காலோசிதமானது. அரசு தற்போது அதற்கான அவதானத்தையே செலுத்தியுள்ளது.

நாட்டுக்கு எடுத்துக்காட்டாக எப்போதும் செயற்படுமாறு அனைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசியல்வாதிகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம். நாட்டு மக்களுக்கு அந்த முன்னுதாரணத்தைக் காட்டும்போதே, பெரும்பாலான மக்கள் உங்களைப் பின்பற்றுவார்கள்.

வெற்றிகொள்ளப்பட்டுள்ள சுதந்திரத்தை எதிர்காலச் சந்ததியினருக்காகப் பாதுகாப்பேன். நாட்டின் ஒற்றுமை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை நிலைநாட்டுவதாக வழங்கிய உறுதிமொழியை எப்போதும் காப்பேன்.

சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை அடைந்த பெருமைமிக்க தேசத்தை உருவாக்குவதற்காக இணையுங்கள் என்று தேச பக்தியுள்ள மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

# கடலில் இறங்கிப் போராடும் மீனவர்கள்!



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வீதியில் இறங்கிப் போராட நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், பருத்தித்துறை - சுப்பர்மடம் மீனவர்கள் நேற்று கடலில் இறங்கிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்து மீறல்களைக் கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் இந்திய மீனவர்களின் படகு மோதி உயிரிழந்த சம்பவத்துக்கு நீதி கோரியும் பருத்தித் துறை - சுப்பர்மடம் மீனவர்கள் ஐந்தாவது நாளாக நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சுப்பர்மடம் மீனவர்கள் கடந்த 31ஆம் திகதி முதல் பருத்தித்துறை - பொன்னாலை வீதியை வழிமறித்து நேற்றுமுன்தினம் வரையில் நான்கு நாள்களாகத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வந்திருந்தனர்.

அந்நிலையில், நேற்றுமுன்தினம் குறித்த வீதியின் ஊடான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளமை, பொதுமக்களின் இயல்வு வாழ்வுக்கு இடையூறு விளைவித்தல், கொரோனா அபாயம் உள்ளிட்டவற்றைச் சுட்டிக்காட்டி பருத்தித்துறைப் பொலிஸார், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் போராட்டத்துக்கு எதிராகத் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர்.

நீதிமன்றத் தடை உத்தரவை அடுத்து நேற்றுமுன்தினம் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தைக் கைவிட்டனர்.

இந்நிலையில், இலங்கையின் சுதந்திர தினமான நேற்றைய தினத்தைக் கரிநாளாக அனுஷ்டித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக கடந்த மாதம் 27ஆம் திகதி கடலுக்குச் சென்ற வத்திராயன் மீனவர்கள் இருவரும் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும், இதுவரை காலமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உயிரிழந்த மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மெழுகு திரிகளை ஏந்தி, கறுப்புக் கொடிகளுடன் கடலில் இறங்கி மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# குருந்தூர்மலைக்கு விரைந்தது கூட்டமைப்பு



(ந.லோகதயாளன்)

இலங்கையின் 74 ஆவது சுதந்திரதினமான நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

குறிப்பாக இவ்வாறு விஜயம் மேற்கொண்டவர்கள் குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளைக்கு முரணாகக் கட்டப்படுகின்ற கட்டடங்களைப் பார்வையிட்டதுடன், அங்கு ஆதி ஐயனார் திரிசூலம் இருந்த இடத்தில் வழிபாடுகளையும் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், இரா.சாணக்கியன், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழிலும் உறவுகள் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் சுதந்திர தினமான நேற்றைய நாளைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம் இடம்பெற்றது.

நேற்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு போன்றவற்றை வலியுறுத்தி இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியவாறு யாழ்ப்பாணம் முனியப்பர் கோயில் பகுதி வரை பேரணியாகச் சென்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# திருமலை சண்முகா இந்து சர்ச்சை: இன முறுகலை ஏற்படுத்தக்கூடாது!

## சம்பந்தன் மனவருத்தத்துடன் கருத்து

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் மீண்டும் எழுந்துள்ள 'ஹபாயா' சர்ச்சையால் அதிருப்தியடைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், இது இனப்பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்பேசும் மக்கள் என்ற ரீதியில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அத்தியாவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஒவ்வொரு இனத்தினுடைய உரிமைகளையும் மற்றைய இனம் மதிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

'ஹபாயா' அணிந்து வந்திருந்த முஸ்லிம் பெண் ஆசிரியர் உண்மையில் அதிபர் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் அது தவறான விடயம் எனவும், இந்தக் கருமத்தை நாம் சமாதானமாகத் தீர்க்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஒருவரையொருவர் மதித்து மற்றவர்களுடைய கருமத்துக்கு - சுயமரியாதைக்கு- இறைமைகளுக்குப் பாதகம் இல்லாமல் நாம் செயற்பட வேண்டும். அனைவரும் இந்தக் கடமையை ஒற்றுமையாகச் செய்ய வேண்டும் என நான் மிகத் தயவாக கேட்டுக்கொள்கின்றேன்.



பிரச்சினையை நாம் வளர்க்கக் கூடாது. தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் வடக்கு - கிழக்கு என்பது எமது சரித்திர ரீதியான வதிவிடம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த அடிப்படையில் இறைமையை நாம் பாதுகாப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும்.- என்றார்.

# மட்டக்களப்பில் சடலம் நேற்றுக் காலை மீட்பு!



மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ்பிரிவிலுள்ள திராய்மடு முருகன் கோவிலுக்கு அருகில் உள்ள பகுதியில் உள்ள வீதிக்கு அருகில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது, பொலிஸாரால் சம்பவ இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# காட்டு யானைகளின் அட்டூழியம் விவசாயிக்கு நேர்ந்த சோகம்!

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டு குளத்தின் கீழ் கால போக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயி ஒருவர் தனது நெல்லை அறுவடை செய்து பைகளில் அடுக்கி வயலில் வைத்திருந்துவிட்டு ஏற்றுவதற்காக உழவு இயந்திரத்துக்காகக் காத்திருந்த வேளை குறித்த பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் விவசாயைத் துரத்திவிட்டு நெல் பைகளை நாசம் செய்துள்ளன.

இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வள்ளிபுனத்தில் வசிக்கும் நாகராசா என்ற விவசாயி இடைக்கட்டு குளத்தின் கீழ் இரண்டு ஏக்கர் நெற்செய்கையை மேற்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு அதிக விலைக்கு உரத்தை வாங்கிப் போட்டு, களைநாசினியைப் பயன்படுத்தி செய்கையை மேற்கொண்ட நிலையில் இந்த சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாகராசா என்ற விவசாயி வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பமாக வயோதிப நிலையிலும் தனது உறவு பிள்ளைகளான பெற்றோர் இல்லாத மூன்று பிள்ளைகளை வளர்த்து வரு கின்றார்.

இந்நிலையில் காலபோக நெற்செய்கையின் விளைச்சலை அறுவடை செய்து வீட்டுக்குக் கொண்டு செல்லத் தயாராக இருந்த நெல்லில் 20 நெல் பைகளை யானை நாசப்படுத்தி உள்ளது.

மூன்று யானைகள் மேற்படி வயல் நிலத்திற்குள் புகுந்து நெல்லு பைகளை நாசம் செய்துள்ளன. தற்போது நெல்லுக்கு அரசாங்கம் நல்ல விலை அறிவித்துள்ள நிலையில் காட்டு யானையால் தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள அவர் இதற்கான இழப்பீட்டை அரசாங்கம் பெற்றுத்தர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து காட்டு யானைகளால் ஏற்பட்டுள்ள இழப்பீட்டை ஈடு செய்து கொடுக்க வேண்டும் கைக்கு எட்டிய விவசாயியின் விளைச்சல் வாய்க்கெட்ட முடியாத நிலை. முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு யானையால் நாள்தோறும் விவசாயிகள் அழிவைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு!

## வடமராட்சி மீனவருக்காக சுமந்திரன் களத்தில்



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நட வடிக்கை எடுத்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மீனவர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி மீனவர்கள் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ச்சியாக தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

அத்துமீறி நுழையும் மீனவர்களை கைது செய்வதற்கு கடற்படையினருக்கு உத்தரவு விட கோரியும், 2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இழுவை மடி தடைச் சட்டம் மற்றும் வெளிநாட்டுப் படகுகளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தும் 2018 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக் கோரியும் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்யவுள்ளதாகவும், அதற்கு வடக்கு மீனவ சங்கங்களின் ஆதரவு வேண்டும் எனவும் மீனவர்கள் மத்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தும் விதமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தரப்புகளுக்கு தாம் எப்போதும் பூரண ஆதரவை வழங்குவோம் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆளில்லா கமெராக்களால் புலம்பெயரும் பறவைகள்

மன்னாரில் உள்ள அதிக உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் வலயத்தைக் கண்காணிப்பதற்காக கொழும்பில் இருந்து வரும் விசேட சலுகைகளைப் பெற்ற சிறு குழுக்கள், பறவைகளை ஆய்வு செய்ய ஆளில்லா கமெராக்களை பயன்படுத்துகின்றமையால் அழகிய பறவை இனங்கள் இலங்கைக்கு மீண்டும் திரும்பாத அபாயம் ஏற்பட்டுள்ளது எனச் சுற்றுச்சூழல் குழு எச்சரித்துள்ளது.

ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் இருந்து பறவை கண்காணிப்பாளர்கள் என அழைக்கப்படுபவர்கள் மன்னாருக்கு ஆளில்லா கமெராக்களைக் கொண்டு வருகின்றமையை அறிந்து ஆழ்ந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளது என வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

தனித்துவமான, அரிய மற்றும் பறவை இனங்கள் மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து தங்கியிருப்பதும் அவற்றின் எதிர்கால வருகையும் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு புலம்பெயர் பறவைகள் உணவு மற்றும் இனப்பெருக்கத்துக்காக மன்னார் சரணாலயத்துக்கு ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வருவதோடு இவற்றில் பிளமிங்கோக்கள் மிக முக்கியமானவை என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் பல பறவை இனங்கள் இப்பகுதிக்கு வருகை தருவதோடு, ஒவ்வொரு வருடமும் புதிய இனங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

இப்பகுதி உயர் பாதுகாப்பு வலையமாகக் கருதப்படுவதோடு, ரேடரில் சிக்காமல் இருக்க ஆளில்லா கமெராக்களை கீழே பறக்க விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையைத் தாம் அறிந்து கொண்டுள்ளது என வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் கூறியுள்ளது.

ஆளில்லா கமெராக்கள் உணவு தேடும் பறவைகளுக்கு அதிக தொல்லை தருகின்றன என வலியுறுத்தியுள்ள அந்த சங்கம், ஆளில்லா கமெராக்கள் எழுப்பும் அதிக சத்தத்தாலும், உணவுத் தேடும் பறவைகளை ஒத்த அவற்றின் வடிவத்தாலும், அவை பறவை இனங்களுக்கு பெரும் தொல்லையாக மாறியுள்ளன என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமையால், பறவை இனங்கள் நாட்டை விட்டு வெளியேறினால், அவை மீளத்திரும்பா எனவும், கொழும்பில் உள்ள சிலருக்கு சலுகைகளை அனுமதித்தமைக்காக முழு நாடும் விலை கொடுக்க நேரிடலாம் எனவும் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த அழிவுகரமான செயன்முறையை உடனடியாக நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் நல்ல மனம் படைத்த ஆளில்லா கமெராக்களை இயக்குபவர்களையும் கேட்டுக்கொள்வதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

புலம்பெயர் பறவைகள் மனித செயல்பாடுகள் காரணமாக எப்படி தங்கள் முந்தைய வாழ்விடத்தை விட்டு வெளியேறின என்பதை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் நினைவுபடுத்தியுள்ளது.

லுணுகம்வெஹெரவில் இருந்து பூந்தல தேசிய பூங்காவிற்கு தண்ணீர் திருப்பிவிடப்பட்டதன் மூலம், பூங்காவில் உள்ள மிகவும் பிரபலமான பறவைக் கூட்டங்கள் நீர் குறைப்பு அல்லது நீர்த்துப்போதல் காரணமாக வடக்கே இடம்பெயர்ந்ததாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த விடயத்தை மறந்துவிடக் கூடாது எனவும், பறவைகள், வடக்கே நகரும், பின்னர் நாட்டை விட்டு வெளியேறும் என வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் எச்சரித்துள்ளது.

# நான்கு மணி நேரம் ஏ - 9 வீதி பூட்டு!

வவுனியா நகரசபை மைதானத்தில் இலங்கையின் 74 ஆவது சுதந்திரதின நிகழ்வுகள் இடம் பெற்ற நிலையில் ஏ9 வீதி உட்பட மூன்று வீதிகள் 4 மணிநேரம் மூடப்பட்டிருந்தது.

சுதந்திர தின நிகழ்வுகள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் இடம்பெற்றதுடன் பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் குலசிங்கம் திலீபன் கலந்து கொண்டார்.

நிகழ்வினையடுத்து ஏ-9 வீதியின் மணிக்கூண்டு கோபுர சந்தியிலிருந்து வைத்தியசாலை சுற்று வட்டம் வரையிலான பாதையும், நகரசபை வீதி, நூலக வீதி ஆகியன காலை 6.30 மணிதொடக்கம் காலை 10.30 மணிவரையிலான காலப்பகுதியில் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் அதிஉயர் பொலிஸ்பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது.

மேலும், சுதந்திரதின நிகழ்வுகளுக்கு செல்பவர்கள் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் நிகழ்வுகளைப் பார்வையிட பொது மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2022இல் வெளியிடப்பெற்றது.